**22.04.2026**

அ.வ.எண்.**217/2014**

<u>பி.சா.**1** சம்சுநிஹார், வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

**1.** வாதி செந்தில்நாதன் யார் யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும், அவர்களின் பெயர் ஜலுலாதீன், மும்தாஜ், பாத்திமா பீ மற்றும் இரண்டு நபர்கள். தாவாசொத்து எந்த கிராமத்தில் உள்ளது என்றால் கீழ்பட்டு கிராமத்தில் உள்ளது. வாதி எந்த சர்வே எண் மற்றும் எவ்வளவு விஸ்தீரணத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு அதை பற்றி தெரியாது என்று சாட்சி கூறிவிட்டு பின்பு சர்வெ எண்.**73**/எ என்று கூறுகிறார். எவ்வளவு விஸ்தீரணம் என்றால் **10** ஏக்கர் இருக்கும். வாதி செந்தில்நாதன் பிரதிவாதிகள் வாதியின் சொத்தை தொந்தரவு செய்ய கூடாது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

**2.** தாவாசொத்து ஆதியில் யாருக்கு பாத்தியபட்டது என்றால் எனக்கு ஞாபகமில்லை. வாதி வழக்கு தாக்கல் செய்த பிறகு எனக்கு நீதிமன்ற அழைப்பாணை உரிய முறையில் கொடுக்கப்பட்டதா என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த பிறகு வழக்கின் சொத்து விவரங்கள் மற்றும் ஆதியில் யாருக்கு பாத்தியம் என்ற விவரம் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்துக்கொண்டேன். தாவாசொத்து ஆதியில் ஏ.கே.எம்.பிச்சை என்பவருக்கு பாத்தியம் என்றால் சரிதான். தாவாசொத்தை ஏ.கே.எம்.பிச்சையின் வாரிசுதாரர்கள் ஏ.கே.எம். பாத்திமாபீவி மற்றும்

ஜைனுலாபுதின் கோவிந்தராஜன் என்பவருக்கு **28.03.2007** தேதியின்று பதிவு செய்யபட்ட பொது அதிகார ஆவணம் தாவாசொத்தை பொறுத்து கொடுத்தார்கள் என்றால் சரிதான்.

3. மேற்சொன்ன பொது அதிகார பத்திரத்தை நான் பார்த்தேனா என்றால் நான் சான்றிட்ட நகலை வாங்கி பார்த்தேன், அதில் உள்ள விவரங்கள் தெரியும். மேற்சொன்ன பொது அதிகார பத்திரத்தில் **2** மற்றும் **4** பிரதிவாதிகள் கோவிந்தராஜ் என்பவருக்கு விற்பனை செய்ய அதிகாரம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்சொன்ன பொது அதிகார பத்திரத்தின் முன்னிலைக்கு கோவிந்தராஜன் என்பவர் **6**ம் பிரதிவாதிக்கு தாவாசொத்தை **30.04.2007**ம் தேதியில் கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான். (சாட்சி தானாக முன்வந்து அந்த கிரையம் ரத்தாகவிட்டது. என்று கூறினார்)

4. **6**ம்பிரதிவாதி மேற்சொன்ன சொத்தை கிரையம் வாங்கிய பிறகு அனுபவித்து பட்டா, சிட்டா,அடங்கல் அனைத்து வருவாய் ஆவணங்களும் அவர் பெயரில் மாற்றிவிட்டார் என்றால் சரிதான், ஆனால் அவர் அனுபவம் எடுக்கவில்லை. **6**ம் பிரதிவாதி தாவாசொத்தை அனுபவித்து வந்ததால்தான் வருவாய் ஆவணங்கள் அனைத்தும் அவர் பெயரில் மாற்றபட்டது என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக **6**ம்பிரதிவாதி தவாாசொத்தை அனுபவிக்கவில்லை என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. **6**ம்பிரதிவாதி தாவாசொத்தை வாதிக்கு **11.10.2010** தேதியன்று கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். **6**ம்பிரதிவாதி முறையான

பிரதிபலன் பெற்றுகொண்டுதான் வாதிக்கு தாவாசொத்தை கிரையம் கொடுத்தார் என்றால் சரியல்ல. 6ம் பிரதிவாதி பிரதிபலனை பெற்றுகொண்டு முறையான ரசீதை வாதிக்கு 11.10.2010 தேதியில் கொடுத்தார் என்றால் சரியல்ல. அது மோசடியான பத்திர பதிவு ஆகும்.

**5**. வாதி தாவாசொத்தை கிரையம் பெற்ற பிறகு அவர் ஆண்டு அனுபவித்து பட்டா, சிட்டா மற்றும் அடங்கல் அவர் பெயரில் மாற்றிவிட்டார் என்றால் சரியல்ல. அதன்பின்பு வாதி ஊராட்சியில் அனுமதி பெற்று தாவாசொத்தை மனைகளாக பிரித்து விஜயராஜ சுபிக்ஷம் என்று பெயரிட்டு விற்பனை செய்துவிட்டார் என்றால் சரிதான், ஆனால் மோசடியான விற்பனை ஆகும்.

( வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)